Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, பிப்ரவரி 12 2024 | இதழ் 211

# தமிழில் பேசி அனைவருக்கும் வாழ்த்து கூறினார் 2 நிமிடத்தில் பேச்சை முடித்தார் கவர்னர்

## மரபுப்படி உரையை படிக்காமல் கவர்னர் புறக்கணிப்பு கவர்னர் உரையை படித்தார் சபாநாயகர்

சென்னை, 12 பிப் 2024: தமிழக சட்டசபையின் முதல் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தொடங்கியது. அனைவருக்கும் தமிழில் பேசி வாழ்த்து கூறினார் கவர்னர் ஆர்.என்.ரவி.

மரபுப்படி அரசு தயாரித்து கொடுத்த உரையை படிக்காமல் கவர்னர் புறக்கணித்தார். 2 நிமிடங்களில் தனது பேச்சை முடித்துக்கொண்டு இருக்கையில் அமர்ந்தார்.

கவர்னரின் ஆங்கில உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை சபாநாயகர் அப்பாவு வாசித்தார். அதுவரை அவையிலிருந்த கவர்னர் ஆர்.என்.ரவி பின்னர் அவையிலிருந்து வெளியேறினார் .கவர்னர் கேட்டுக்கொண்ட கோரிக்கையை ஏற்று முடிவில் தேசியகீதம் பாடப்பெற்றது.

இந்த ஆண்டுக்கான தமிழக சட்டசபையின் முதல் கூட்டம் இன்று தொடங்கியது.

இந்த நிலையில் ஆண்டின் முதல் சட்டசபை கூட்டம் இன்று கவர்னர் ஆர்.என்.ரவியின் உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இன்று சட்டசபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக தலைமைச் செயலகத்திற்கு வந்த கவர்னர் ஆர்.என்.ரவிக்கு பேண்டு வாத்தியம் முழங்க போலீஸ் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. அணிவகுப்பு மரியாதையை கவர்னர் ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து சபாநாயகர் அப்பாவு, சட்டசபை செயலாளர் சீனிவாசன் ஆகியோர் கவர்னருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

கவர்னர் அவைக்கு வந்ததும் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்தார். அவருக்கு அடுத்து வைக்கப்பட்டிருந்த இருக்கையில் சபாநாயகர் அப்பாவு அமர்ந்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் சட்டசபை கூட்டம் தொடங்கியது. அப்போது கவர்னர் ஆர்.என்.ரவி. 'அனைவருக்கும் வணக்கம்' என தமிழில் கூறி தனது உரையை தொடங்கினார். அவர் தமிழில் பேசியதாவது:



“சட்டப்பேரவை கூட்டத்தொடரின் தொடக்க உரையை இந்த அவையில் நிகழ்த்துவதை எனக்குக் கிடைத்த கவுரவமாக எடுத்துக் கொள்கிறேன். அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகள். இந்த புது வருடம் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கட்டும். அவையில் உள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கவர்னர் தமிழில் பேசிவிட்டு பின்னர் கவர்னர் உரையை வாசிக்காமல் சில கருத்துகளை ஆங்கிலத்தில் பேசினார். அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து இந்த அரசின் நோக்கங்களை காலத்தை வென்ற திருவள்ளுவரின் குறள் ஒன்றை குறிப்பிட்டு எனது உரையைத் தொடங்குகிறேன். “பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ்வைந்து” மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு.

நான் திரும்பத் திரும்ப விடுக்கும் கோரிக்கையும் அறிவுரையும் இதுதான். தேசிய கீதத்துக்கு மரியாதை கொடுத்து தேசிய கீதத்தை கூட்டத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் இசைக்க வேண்டும்.

அரசின் இந்த உரையில் பல பத்திகள் உள்ளன. உண்மையின் அடிப்படையிலும் தார்மீக அடிப்படையில் இந்த உரையுடன் நான் உடன்படவில்லை. எனவே, இந்த அவையில் மக்களுக்கு நன்மை பயக்கும் விவாதங்கள் நடக்க வேண்டும் எனக் கூறி எனது உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வாழ்க தமிழ்நாடு, வாழ்க பாரதம், ஜெய் ஹிந்த், ஜெய் பாரத், நன்றி” என்று கூறி தனது உரையை 2 நிமிடத்தில் முடித்துக் கொண்டார்.

மாநில அரசு தயாரித்த கொள்கை உரையை படிக்காமல் புறக்கணித்து இருக்கையில் அமர்ந்தார்.

அப்போது அவையில் சில விநாடிகள் சலசலப்பு ஏற்பட்டது. அதற்குள் சபாநாயகர் குறுக்கிட்டு கவர்னர் உரையைத் தான் வாசிப்பதாகக் கூறி வாசித்தார். கவர்னர் உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.

சபாநாயகர் அப்பாவு உரையை வாசிக்கும் நேரத்தில் கவர்னர் என். ரவி அவையிலேயே இறுக்கத்துடன் அமர்ந்திருந்தார்.

சபாநாயகர் அப்பாவு கவர்னர் உரையை தமிழில் வாசித்து முடித்ததும் கவர்னருக்கு ஒரு கோரிக்கை வைத்து பேசினார்.

அப்போது சபாநாயகர் பேசியதாது:

தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் வெள்ள நிவாரணத்திற்கும் தமிழக அரசு கோரிய நிதியை ஒன்றிய அரசு இன்னமும் தரவில்லை. இதை தமிழகத்திற்கு ஒன்றிய அரசிடமிருந்து கவர்னர் ஐயா பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சபாநாயகர் அப்பாவு கேட்டார். அவர் என்ன பேசுகிறார் என்று கவர்னர் தனது உதவியாளரை அழைத்து கேட்டார். அவர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கூறினார்.

இதையடுத்து கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சட்டசபையில் எதிரான தீர்மானத்தை அவை முன்னவர் துரைமுருகன் பேச தொடங்கியதும் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டு சென்றார். துரைமுருகன் முன்மொழிந்த தீர்மானம், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கவர்னர் கேட்டுக்கொண்ட கோரிக்கையை ஏற்று கூட்ட முடிவில் தேசியகீதம் பாடப்பெற்றது. அதைத்தொடர்ந்து இன்றைய கூட்டம் நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரசின் உரையை முழுமையாக படிக்காமல் கவர்னர் புறக்கணித்திருப்பது தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

கடந்த மாதம் கேரள சட்டசபை கூட்டத்திலும் அம்மாநில கவர்னர், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை படிக்காமல் புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.

# அண்ணாமலையின் யாத்திரை 200வது தொகுதி சென்னையில் நிறைவு

## பிரதமருக்கு பிடித்த மாநிலம் தமிழ்நாடு: பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் ஜே.பி.நட்டா பேச்சு

சென்னை, 12 பிப் 2024: பிரதமர் மோடியின் இதயத்திற்கு நெருக்கமானதாக தமிழகம் எப்போதும் இருந்து கொண்டே உள்ளது என்று பாரதீய ஜனதா தேசிய தலைவர் ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

தமிழக பாரதீய ஜனதா தலைவர் அண்ணாமலை மேற்கொண்ட ‘என் மண் என் மக்கள் யாத்திரை’ 200-வது தொகுதி நிறைவையொட்டி சென்னையில் நேற்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்க சென்னை வந்த பாரதீய ஜனதா தேசிய தலைவர் ஜே.பி.நட்டாவுக்கு தமிழக பாரதீய ஜனதா தலைவர் அண்ணாமலை தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்னை தங்கசாலை பகுதிக்கு வந்த அவர், பொதுக்கூட்டம் நடைபெறும் மேடைக்கு 500 மீட்டர் தொலைவிலேயே காரை விட்டு இறங்கி சிறிது தூரம் நடந்து, பிறகு பிரச்சார வாகனத்தில் பயணித்தார். சாலையின் இருபுறமும் திரண்டிருந்த பாரதீய ஜனதா நிர்வாகிகளும், தொண்டர்களும் ஜே.பி.நட்டாவிற்கு மலர் தூவி வரவேற்பு அளித்தனர்.

பின்னர் பொதுக்கூட்ட மேடைக்கு வந்த ஜே.பி.நட்டாவை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாரதீய ஜனதா துணைத் தலைவர் கரு.நாகராஜன், மேலிட




பொறுப்பாளர் அரவிந்த் மேனன், இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன், மகளிர் அணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன், முன்னாள் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், எச்.ராஜா, புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி. சண்முகம், இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழகம் தலைவர் தேவநாதன் யாதவ், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் ஆகியோர் வரவேற்றனர்.

பொதுக்கூட்டத்தில் ஜே.பி.நட்டா பேசியதாவது:-

தேசிய வளர்ச்சி குறித்து பேசும் போது தமிழகத்தின் பங்கை குறிப்பிடாமல் இருக்க முடியாது. பிரதமர் மோடியின் இதயத்திற்கு நெருக்கமானதாக தமிழகம் உள்ளது அவர் எங்கு சென்றாலும் தமிழகத்தின் இலக்கியங்களை சுட்டிக் காட்டுகிறார்.

சமீபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டுள்ளது. எம்.எஸ்.சுவாமிநாதன் இந்தியாவுக்கு உணவு பாதுகாப்பை அளித்தார். இன்று உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற்றுள்ளதுடன் வெளிநாடுகளுக்கு வழங்குகிறோம்.

தமிழகம் மிகச் சிறந்த கலாச்சாரம், பாரம்பரியம், பழமையான மொழி போன்றவற்றை தன்னகத்தே கொண்டது. ஆன்மிகத்திற்கு தமிழகம் அளித்துள்ள பங்கையும் மறக்க முடியாது.

ஆனால் இன்று தமிழகம் மோசமான தலைவரால் ஆளப்படுகிறது. தி.மு.க. தலைமைக்கு ஞானம் இல்லை. ஜனநாயகத்துக்கு மரியாதை அளிக்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வு இல்லை. நான் வரும் போது தெரு விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன, கடைகள் மூடப்பட்டிருந்தன, போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். இந்த காட்சிகள் எமர்ஜென்சி காலமான நெருக்கடி நிலையை நினைவுபடுத்துகின்றன.

முதல்வர் ஸ்டாலினுக்கு சொல்கிறேன்; உங்களின் செயல்பாடுகளால், உங்களை து□க்கி எறியும் காலம் வந்து விட்டது. போலீசார் கடைகளை மூட வைக்கின்றனர். இது ஜனநாயகமா? தமிழகத்தின் பாரம்பரியமா? தி.மு.க. தெரு விளக்குகளை அணைக்கிறது. ஆனால் தி.மு.க. விளக்கை அணைப்பதற்கான நேரம் வந்து விட்டது. அதற்கான யாத்திரையை அண்ணாமலை நடத்தி வருகிறார். யாத்திரை 200 தொகுதிகளை நிறைவு செய்துள்ளது. வரும் 25ம் தேதி 234 சட்டசபை தொகுதிகளில் யாத்திரையை நிறைவு செய்ய உள்ளார்.

பிரதமர் மோடி நாட்டை வளர்ச்சி அடையச் செய்துள்ளார். 'ஒரே பாரதம்; உன்னத பாரதம்' என்பதே நம் கொள்கை. பிரதமராக மோடி பொறுப்பேற்ற பின், ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகத்தை தந்துள்ளார்.

மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்த பின், உலகப் பொருளாதாரத்தில் நம் நாடு 5வது இடத்திற்கு வந்துள்ளது. நம்மை ஆண்ட பிரிட்டனை முந்தி வந்துள்ளோம். பா.ஜ.க.வுக்கு மீண்டும் வாய்ப்பளித்தால், உலகப் பொருளாதாரத்தில் 3வது இடத்தைப் பிடிக்கும். தற்போது, நம் நாடு ஆட்டோ மொபைல் உற்பத்தியில் ஜப்பானை பின்னுக்கு தள்ளி, 3ம் இடத்திற்கு வந்துள்ளது. முன்பெல்லாம் மொபைல் போன்களில், 92 சதவீதம் சீனாவில் தயாரிக்கப்பட்டன; இன்று 97 சதவீதம் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது. இரும்பு உற்பத்தியில் 2ம் இடத்திற்கு வந்துள்ளோம்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
பிப்ரவரி 12, 2024

# முதலாவது எல் & டி தேசிய ஸ்டெம் சவால் போட்டி, இளம் திறமைசாலிகளைக் கொண்டாடியது!

சென்னை, 12 பிப் 2024: பிப்ரவரி 3-ம் தேதி மும்பையில் நடைபெற்ற முதலாவது எல் & டி நேஷனல் ஸ்டெம் சவால் போட்டியில் சென்னை கெருகம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி தேசிய சாம்பியனாக உருவெடுத்தது. பள்ளி மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் பாடங்களை (ஸ்டெம் கல்வி) ஊக்குவிப்பதற்காக இந்தியா முழுவதும் ஆறு நகரங்களில் எல் & டி நிறுவனம் நடத்திய மண்டல அளவிலான ஸ்டெம் திருவிழாக்களின் உச்ச நிறைவு நிகழ்ச்சியாக இந்த நிகழ்வு அமைந்தது.

அதன் சமூகப் பொறுப்புணர்வு (சி.எஸ்.ஆர்) செயல்பாட்டின் ஒரு பகுதியாக, எல் & டி நிறுவனம், விக்ரம் ஏ சாராபாய் சமூக அறிவியல் மையத்துடன் (வி ஏ எஸ் சி எஸ் சி) இணைந்து இந்தப் போட்டியை நடத்தியது.

பிப்ரவரி 3-ம் தேதி போவாயில் உள்ள ஏ எம் என் டவரில் நடத்தப்பட்ட எல் & டி தேசிய ஸ்டெம் சவால் போட்டி, எல் & டி-யின் 'பொறியியல் எதிர்காலங்கள்' முன்முயற்சியின் மூலம் ஸ்டெம் கல்வியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைந்தது. இது இந்தியா முழுவதிலுமிருந்து வந்த இளம் உள்ளங்களின் அசாத்திய திறமை மற்றும் புதுமையை வெளிப்படுத்தியது. இதில் சென்னை கெருகம்பாக்கம் வெற்றி பெற்று, தேசிய சாம்பியனாக உருவெடுத்தது. அதே நேரத்தில் சென்னை வேலப்பஞ்சாவடி அரசு உயர்நிலைப் பள்ளி, மற்றும் குஜராத்தின் ஹாஜிரா ஸ்ரீ காஞ்சன்லால் மாமவாலா சூரத் முனிசிபல் கார்ப்பரேஷன் பள்ளி ஆகியவை முறையே முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பிடித்தன. கோயம்புத்தூர் களியனம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி நடுவரின் சிறப்புப் பரிசை வென்றது.

பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 6,000 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவற்றில் இருந்து 208 அணிகள் (416 குழந்தைகள்) அக்டோபர் 2023 முதல் நடத்தப்பட்ட மண்டல அளவிலான ஸ்டெம் விழாக்களில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றில், சென்னை, கோயம்புத்தூர், ஹஜிரா, வதோதரா, தலேகான் மற்றும் மும்பையைச் சேர்ந்த 24 அணிகள் (50 குழந்தைகள்) எல் & டி தேசிய ஸ்டெம் சவால் போட்டியில் பங்கேற்றன.

வெற்றி பெற்ற நான்கு பள்ளிகளுக்கும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. தேசிய சாம்பியன் பட்டம் வென்ற பள்ளிக்கு ரூ.50 ஆயிரம், இரண்டாவது இடம்பிடித்த பள்ளிக்கு ரூ. 30 ஆயிரம், மூன்றாவது இடம்பிடித்த மற்றும் நடுவரின் சிறப்புப் பரிசு வென்ற பள்ளிக்கு தலா ரூ.20 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது. இது தவிர, வெற்றி பெற்ற நான்கு அணிகளும் தொலைநோக்கிகள், ட்ரோன்கள் மற்றும் டிஐஒய் ரோபாட்டிக்ஸ் கருவிகள் உள்ளிட்ட பல பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்டெம் கல்வியில் மேலும் ஆர்வம் செலுத்தி, அதில் அவர்கள் ஈடுபாடு செலுத்தும் வகையில் இந்த பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன் எல் & டி நிறுவனத்தின் தொழில்நுட்பத் திட்டங்களைப் பார்வையிடுவதற்கும், எல் & டி தலைமைக் குழுவுடன் கலந்துரையாடுவதற்கும் வெற்றி பெற்ற அணிகள் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

எல் & டி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் எஸ்.என்.சுப்பிரமணியன் பரிசுகளை வழங்கிப் பேசுகையில், "முதலாவது எல் & டி தேசிய ஸ்டெம் சவால் போட்டியில் பங்குபெற்ற இளம் கண்டுபிடிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட தனித்துவம் வாய்ந்த திறன்கள் மற்றும் படைப்பாற்றலைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கிறது. குழந்தைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஸ்டெம் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இது போன்ற முன்முயற்சிகள் தரமான கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நிரூபிக்கின்றன. குழந்தைகளின் பின்னணியைப் பொருட்படுத்தாமல், ஸ்டெம் கல்வி உலகில் அவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுப் படித்து சிறந்த வாய்ப்புகளைப் பெறுவதை இதுபோன்ற போட்டிகள் உறுதி செய்கின்றன" என்றார்.

எல் & டி ஸ்டெம் தேசிய சவால் போட்டி, மூன்று சிறந்த நிலைகளில் நடத்தப்பட்ட நிலையில், போட்டியின் வெவ்வேறு கட்டங்களில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.


# 10,000 சார்த்தி அபியான் உதவித்தொகைகள் மூலம் டிரக் ஓட்டுனர்களின் மகள்களுக்கு அதிகாரம் அளிப்பதில் மஹிந்திரா தனது உறுதிப்பாட்டை தொடர்கிறது




சென்னை, 12 பிப் 2024: மஹிந்திரா குழுமத்தின் ஒரு அங்கமான மஹிந்திரா டிரக் மற்றும் பஸ் டிவிஷன் (எம் டி பி டி), பெண்களின் உயர்கல்விக்கான உரிமையை ஆதரிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் ஒரு சிறிய பங்களிப்பை வழங்கும் ஒரு முன்முயற்சியான மஹிந்திரா சார்த்தி அபியான் ஸ்காலர்ஷிப்ஸ் மூலம் டிரக் ஓட்டுநர்களின் மகள்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அதன் உறுதிப்பாட்டை தொடர்ந்தது. தமிழ்நாடு, நாமக்கல்லில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மஹிந்திரா & மஹிந்திரா இன் வர்த்தக வாகனங்களின் வணிகத் தலைவர் திரு. ஜலஜ் குப்தா முன்னிலையில், நேரடி கணக்கு பரிமாற்றம் மூலம் இந்த உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2014 இல் மஹிந்திரா சார்த்தி அபியான் மூலம் தொடங்கப்பட்ட டிரக் ஓட்டுநர் சமூகத்திற்கான மஹிந்திரா டிரக் மற்றும் பஸ் டிவிஷன் இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பில் இந்த முயற்சி ஒரு குறிப்பிடத்தக்க எல்லையைக் குறிக்கிறது. இதற்கான இந்த ரீச் அவுட் திட்டம் இந்தியா முழுவதும் 75 க்கும் மேற்பட்ட போக்குவரத்து மையங்களை மற்றும் நன்கு வரையறுக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் சுயாதீனமான செயல்முறையை உள்ளடக்கியது.

இந்த தொழில்துறை முதல் சாதனையைக் குறித்து பேசிய மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் இன் வர்த்தக வாகனங்களின் வணிகத் தலைவர் திரு. ஜலஜ் குப்தா, "சமூகங்களை மேம்படுத்துவதிலும், நிலையான சமூக தாக்கத்தை உருவாக்குவதிலும் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம். நேர்மறையான மாற்றத்தை வளர்ப்பதற்கும், இளம் பெண்களுக்கு அவர்களின் இலக்குகளைத் தொடர ஒரு தளத்துடன் அதிகாரம் அளிப்பதற்கும் எங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்ற இந்த தனித்துவமான இந்த முன்முயற்சி நாட்டின் தொலைதூர உட்புறங்களை சென்றடைந்தது. மஹிந்திரா சார்த்தி அபியான் ஆனது டிரக் ஓட்டுநர் சமூகத்திற்கு நன்றி தெரிவிப்பதற்கான எங்கள் வழியாகவும் மற்றும் அவர்களின் மகள்களுக்கு கல்வி கற்பிப்பதில் காட்டப்படும் முன்மாதிரியான முயற்சிக்கு ஒரு நன்றி உணர்வைக் காட்டுவதாகவும் இருக்கிறது." என்று கூறினார்.

# இஸ்ரோவின் சிறப்பான சாதனைகளுக்கு கின்னஸ் உலக சாதனைகள் பட்டத்தை அமைத்துள்ளது, பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்சூரன்ஸ்




சென்னை, 12 பிப் 2024: இஸ்ரோவின் சிறப்பான சாதனைகளுக்கு வணக்கம் செலுத்தும் வகையில், பஜாஜ் அலையன்ஸ் லைஃப் இன்சூரன்ஸ், அதன் தனித்துவமான உடற்பயிற்சி முன்முயற்சியுடன் மற்றொரு கின்னஸ் உலக சாதனைகள் பட்டத்தை அமைத்துள்ளது.

- அடிவயிற்றுப் பலகையை வைத்திருக்கும் மிகப்பெரிய ஆன்லைன் வீடியோ ஆல்பத்தை உருவாக்குவதன் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ஐ எஸ் ஆர் ஓ) ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்துகின்றனர்.
- இஸ்ரோ மற்றும் இந்திய சினிமாவின் பிரபல நடிகையான டாப்ஸி பண்ணு ஆகியோர் பிளாங்காத்தானின் நான்காவது பதிப்பிற்கு தலைமை தாங்கினர்

சென்னை, பிப்ரவரி 11, 2024: இந்தியாவின் முன்னணி தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான பஜாஜ் அலையன்ஸ் லைஃப், சந்திரயான் மற்றும் இஸ்ரோவின் குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்டாடும் வகையில் பெங்களூரு ஸ்ரீ கண்டீரவா வெளிப்புற மைதானத்தில் #பிளாங்காதான்-ன் நான்காவது பதிப்பை இன்று ஏற்பாடு செய்துள்ளது. சோலார் மிஷன், ஆதித்யா எல்1. தரையில் பிளாங்காதான் நிகழ்வு, நிறுவனத்தின் மிகவும் பிரபலமான பிரச்சாரமான #பிளாங் பார் ஏசஸ்-ன் உச்சகட்டமாக இருந்தது, இது ஐ எஸ் ஆர் ஓ வில் உள்ள புத்திசாலித்தனமான விஞ்ஞானிகளுக்கு நன்றி தெரிவிக்க இந்தியர்களை ஒன்று கூடுமாறு அழைப்பு விடுத்தது.

# கியூ3எஃப்ஒய்24-க்கு சிறப்பான வருவாய்-இலாபத்தை அறிவிக்கும் எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்; முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பிந்தைய இலாபம் 772% அதிகரிப்பு

சென்னை, 12 பிப் 2024: கையாளப்படும் உணவுகள் மற்றும் வேளாண் விளைபொருட்கள் துறையில் முதன்மை வகிக்கும் எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 2024 பிப்ரவரி 08 அன்று நடைபெற்ற அதன் இயக்குநர் குழு கூட்டத்தில் 2023 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்கள் கால அளவிற்கு தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகள் அறிக்கைக்கு ஒப்புதல் அளித்திருக்கிறது.

2023 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டின்போது இயக்க செயல்பாடுகளிலிருந்து கிடைத்த வருவாய் ரூ. 12517.23 மில்லியன் என்பதாக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 63% மற்றும் முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 4% வளர்ச்சியினை பதிவு செய்திருக்கிறது. ஈபிஐடிடிஏ ரூ. 759.50 மில்லியனாக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84% மற்றும் முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 173% வளர்ச்சியினை எட்டியிருக்கிறது. வரிக்குப்பிந்தைய இலாபம் (பி ஏ டி) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 75% மற்றும் முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 772% என்ற அபரிமிதமான வளர்ச்சியுடன் ரூ. 491.01 மில்லியன் என பதிவாகியிருக்கிறது.

நிதியாண்டு எஃப்ஒய்24 கியூ3 மற்றும் 9 மாதகால அளவிற்கான செயல்பாடு குறித்து கருத்து தெரிவித்த எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ்-ன் தலைமை நிதி அதிகாரி திரு. குல்செப் அஹமத் கூறியதாவது; "வலுவான வளர்ச்சி கண்டுவரும் இந்திய பொருளாதார பின்புலத்தின் மத்தியில் மிகச்சிறப்பான காலாண்டு செயல்பாட்டை நாங்கள் கண்டிருக்கிறோம். காலாண்டில் அதிகபட்ச வருவாயாக ரூ. 12517.23 மில்லியன் என்ற சாதனைப்பதிவு, எமது உத்தி வாய்ந்த செயல்திட்டத்திற்கும் மற்றும் சாதிக்க வேண்டுமென்ற எமது மனஉறுதிக்கும் ஒரு சிறந்த சாட்சியமாக திகழ்கிறது. வருவாய் மற்றும் வரிக்குப்பிந்தைய இலாபம் ஆகிய இரண்டிலும் நிதியாண்டு 232-ன் அளவுகளை கடந்திருப்பது எமது 5மடங்கு வளர்ச்சி என்ற இலக்கை நோக்கிய எமது முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது."

உள்நாட்டில் மட்டுமல்லாது ஏற்றுமதி சந்தைகளிலும் சிறப்பான முன்னேற்றத்தை இந்நிறுவனம் எட்டியிருக்கிறது. திட்டமிடப்பட்ட விற்பனை வருவாயை எட்டுவதற்கு இது உதவியிருக்கிறது. இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டிற்கும் ஈபிஐடிடிஏ இலாப வரம்பில் வளர்ச்சியை தொடர முடியுமென்று இந்நிறுவனத்தின் நிர்வாகம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதிக மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள், ஏற்றுமதியில் உயர்வு மற்றும் அரிசி மற்றும் மீன் போன்ற வெவ்வேறு பிரிவுகளில் செயல்பாடுகளின் விரிவாக்கம் ஆகியவற்றின் காரணமாக தொடர்ச்சியான இந்த வளர்ச்சி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, இந்த நிறுவனம் 1:10 என்ற விகிதத்தில் ஒரு பங்குப் பிரிப்பைச் செயல்படுத்தியது அதாவது ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்பு கொண்ட ஒவ்வொரு ஈக்விட்டி பங்கின் துணைப்பிரிவு/பிரிவிற்கும், ரூ. 1 முகமதிப்பு கொண்ட, ஒவ்வொன்றும் முழுமையாகச் செலுத்தப்பட்ட பத்து ஈக்விட்டி பங்குகளாக முழுமையாகச் செலுத்தப்பட்டது. மேலே கூறப்பட்ட பங்குப் பிரிப்பிற்கான பதிவுத் தேதி டிசம்பர் 29, 2023 ஆகும். எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் உணவு வர்த்தக அமைப்பாகச் செயல்படுகிறது. இந்த நிறுவனம் உறைந்த புதிய எருமை இறைச்சி, தயாரிக்கப்பட்ட மற்றும் உறைந்த இயற்கைப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் உள்ளிட்ட கையாளப்படும் உணவுகள் மற்றும் விவசாயப் பொருட்களை வழங்குகிறது. எச் எம் ஏ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் உலகளாவிய அளவில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறது. இந்த நிறுவனம் நாளொன்றுக்கு 1472 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் சிறப்பு வாய்ந்த உற்பத்தி மையங்கள் ஆக்ரா, உன்னோ, பஞ்சாப், அலிகார், மேவாட் மற்றும் பிரபாஹனி ஆகிய ஆறு நகரங்களில் பரந்து விரிந்து காணப்படுகிறது. இந்த நிறுவனம் உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனைக்காக முழுவதும் தானியங்கி வசதியுடன், முழுவதுமாக ஒருங்கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்த நிறுவனமானது செயல்திட்ட அடிப்படையில் குறைவான லாப வாய்ப்பு உள்ள நாடுகளில் விற்பனையைக் குறைத்துக் கொண்டு, அதிக லாப வாய்ப்பு உள்ள சந்தைகளை நோக்கி படிப்படியாக நகர்ந்து வருகிறது.

# வேதாந்தா ரிசோர்சஸ் தனது பத்திரதாரர்களுக்கு திருப்பிச் செலுத்துதல்களை முடித்ததாக அறிவிக்கிறது

சென்னை, 12 பிப் 2024: வேதாந்தா ரிசோர்சஸ் , ஆண்டின் தொடக்கத்தில் பெற்ற ஒப்புதலுக்கு இணங்க பிப்ரவரி 7, 2024 அன்று தனது பத்திரதாரர்களுக்கு திருப்பிச் செலுத்துதல்களை முடித்ததாக அறிவிக்கிறது. இதில் பத்திரங்களில் $3.2 பில்லியன் முதிர்வுகள் வெற்றிகரமாக 2029 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டன. இந்த செயலாக்கத்தை முடித்ததோடு வி ஆர் எல் இல் உள்ள இந்த கடன் முதிர்வுகள் மிகவும் சமமாக விநியோகிக்கப்பட்டுள்ளன, இது செயலாக்கத்தில் எங்கள் முக்கிய நோக்கமாக இருந்தது என்பதை வி ஆர் எல் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

நீங்கள் அறிந்திருக்கிறபடி கடந்த ஆண்டு செப்டம்பரில் வேதாந்தா குழுமம் ஒரு குறிப்பிடத்தக்க பிரித்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தை அறிவித்தது. இது 17 முக்கிய வணிகங்களில் வேதாந்தா குழுமத்தை மறுசீரமைக்கும். ஒவ்வொரு வணிகமும் உலகத் தரம் வாய்ந்த நிர்வாகத் தலைமையைக் கொண்டுள்ளது, சமீபத்திய அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது, இறக்குமதி மாற்றீடு மற்றும் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதை ஒரு முக்கிய முன்மொழிவாக கொண்டுள்ளது. நிறுவன மற்றும் சில்லறை முதலீட்டாளர்களுக்கு உயர்தர மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புகளையும் அவை ஒன்றுபோல் வழங்குகின்றன. செயல்பாட்டின் முன்னேற்றத்தை குறித்து நாங்கள் அவ்வப்போது அறிவிப்புகளை வழங்குவோம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# "இன்பினிட் சேவா" - தனித்துவமான டிஜிட்டல் சேவை சென்னையில் தொடக்கம்






சென்னை, 12 பிப் 2024: சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட மூன்று தனித்துவமான சேவைகளை வழங்கும் "இன்பினிட் சேவா" (மிஸீயீவீஸீவீமீ ஷிமீஸ்ணீ) என்ற இணையதள அமைப்பு சென்னையில் தொடங்கியது. இதன் முப்பரிமாண இயக்கமாக (1) "பிரேரணா ஹெல்ப்லைன் அறக்கட்டளை" - தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பயனாளிகளிடையே பாலமாகச் செயல்படுதல், (2) "தமிழ்நாடு சேவா அறக்கட்டளை" - கிராம வளர்ச்சிப்பணிகள் மற்றும் குறிப்பாக கோவில்களில் தினமும் பூஜைகள் நடைபெறுவதற்காக அதற்கென முன்வருபவர்களை மற்றும் தன்னார்வலப் பணியாளர்களை ஒருங்கிணைத்து அதை உறுதிசெய்தல், (3) "இன்பினிட் விஷன் இந்திய அறக்கட்டளை"- தொழில்முனைவோருக்கான கட்டமைப்பு மற்றும் பயிற்சிகளை வழங்கி அவர்களின் வளர்ச்சிக்கான மாற்றத்தை உருவாக்குதல் ஆகிய மூன்று பணிகளைச் செய்வதற்காக 'இன்பினிட் சேவா' அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

. இன்ஃபினிட் சேவாவின் கீழ் இயங்கும் அமைப்புகள்:

பிரேரணா ஹெல்ப்லைன் அறக்கட்டளை, நன்கொடை அளிக்க முன் வருபவர்கள் மற்றும் வருட லாபத்தில் 2 சதவிகிதத்தை சமுதாயப் நற்பணிகளுக்காக வழங்கும் நிறுவனங்கள் ஆகியோரை நன்கொடை பெற விழையும் தொண்டுநிறுவனங்களுடன் இணைக்கும் பாலமாகச் செயல்படுவதே இந்த அமைப்பின் பணியாகும். இதன் மூலம் நிதி சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் சேவை மனப்பான்மை மற்றும் சமூக ஈடுபாடு ஊக்குவிக்கப்படுகிறது. உதவி தேவைப்படும் தனிநபர்கள், அவர்களின் தேவைகளுக்குத் தகுந்த தீர்வுகளைப் பெற வழி காட்டுவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. கிராமப்புற வாழ்வாதார வளத்திற்கான உதவிகள் செய்ய முன்வருபவரையும் உதவிகள் கோருபவரையும் ஒருங்கிணைக்கும் பணிகளை இந்த இணைய (டிஜிட்டல்) தளம் செயல்படும்.

தமிழ்நாடு சேவா அறக்கட்டளை - : தமிழ்நாட்டில் உள்ள மிகப்பழைமை வாய்ந்த கோவில்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பணிகள் செய்வதற்கும், தினசரி பூஜைகள் நடத்தப் போதுமான வசதி இல்லாத மிகப் பழமையான கோவில்களுக்கு உதவிடவும், அவற்றைச் செய்ய முன்வருவோரை ஒருங்கிணைக்கும் வகையில் இன்பினிட் சேவா இணைய (டிஜிட்டல்) தளம் பணியாற்றும். இந்த இணைய தளத்தின்மூலம் கோவில்களில் தினசரி பூஜைகள் நடத்த நிதியுதவி வழங்கும் பக்தர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவர்கள் தங்களின் நன்கொடைகளை அவர்கள் விரும்பும் கோவிலுக்கு உரிய காலத்தில் வழங்கி ஆன்மீக அனுபவம் பெற இயலும். உள்ளூர் மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரை கோவில் பராமரிப்பில் பங்கேற்க வழிவகை ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தினசரி பூஜைகள் சரியான முறையில் செய்யப்படுவதை உறுதி செய்வதோடு, பக்தர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வு ஏற்படுத்தவும் இயலும். ஒவ்வொரு கோவிலின் வரலாறு, தெய்வ விக்கிரகங்கள் மற்றும் தல புராணம் ஆகிய தகவல்களைக் கொண்ட விரிவான ஆவணங்கள் உருவாக்கவும் இன்பினிட் சேவா அமைப்பு திட்டமிட்டுள்ளது. .

இன்ஃபினிட்டி விஷன் இந்தியா அறக்கட்டளை - தொழில் இணைப்பு இணைய தளமான இது தொழில் முனைவோர் மற்றும் நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்கவும், அவற்றைத் தீர்க்கும் விதமாக ஆராய்ச்சி மேற்கொள்ளவும், பல்வேறு தளங்கள் மூலம் நிபுணத்துவம் பெறவும், முதலீடு செய்யவும் வழிவகை ஏற்பட உதவும் அமைப்பாகும், இதன் மூலம், எதிர்கால வளர்ச்சியை உறுதி செய்யும் தலைவர்கள் உருவாக ஊக்கப்படுத்தப்படும். திறன் மேம்பாட்டு பட்டறைகள், பயிற்சி அமர்வுகள், ஆதரவு திட்டங்கள் மற்றும் அறிவு பகிர்வு நிகழ்வுகள் போன்றவை தொடர்ந்து நடத்தப்படும். புதுமையான யோசனைகள் பிறப்பதற்கு வாய்ப்புகள் உருவாகும். சமூக நலனுக்காக பல்வேறு நிறுவனங்களின் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டப் பயன்கள் மிகச்சரியான நபர்கள் / நிறுவனங்கள் பெற வழியேற்படும். .-

இன்பினிட் சேவா அமைப்பு தனது திட்டப்பணிகளை தொடங்கும் பிரமாண்ட விழா சென்னையில் நடைபெற்றது. சமூகங்களை மேம்படுத்துதல், நேர்மறையான மாற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் தமிழ்நாட்டில் கிராம முன்னேற்றம் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் புனிதத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான பணிகளைத் தொடங்கியுள்ள இன்பினிட் சேவாவின் முயற்சிகள் இந்தியாவில் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் கலாச்சார நிலப்பரப்புகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்..

துவக்க விழாவில் வரவேற்புரையாற்றிய இவ்வமைப்பின் நிறுவனர் திருமதி நளினி பத்மநாபன், தமிழ்நாட்டில் ஒரு லட்சத்து பத்தாயிரம் கோவில்கள் உள்ளன, அவற்றில் சற்றேறக்குறைய 40000 கோவில்கள் அறநிலையத்துறையால் பராமரிக்கப்படுகின்றன. பல்லாயிரம் கோவில்கள் ஒருவேளை பூஜையில்லாமல் பூட்டிக்கிடக்கின்றன. அவற்றில் தினமும் விளக்கேற்றி பூஜை செய்ய மாதம் ஒன்றுக்கு ரூ.15000/- முதல் ரூ.20000/- வரை செலவாகும். இத்தகைய கோவில்களின் பட்டியலை இன்பினிட் சேவா இணையதளத்தில் பதிவிட்டு ஒவ்வொரு கோவிலையும் பராமரிக்க முன் வருவோரையும் அதே பகுதியிலுள்ள தன்னார்வலர்கள் மூன்று பேரையும் இணைத்து கோவிலில் தினமும் பூஜைகள் நடைபெறுவதை இந்த அமைப்பு உறுதிப்படுத்தும். கோவிலின் மாத வரவு செலவு கணக்கினைப் சரிபார்க்க அதே பகுதியில் வேறு மூன்று தன்னார்வலர்கள் சேவைப்பணியில் ஈடுபடுத்தப்படுவர்ர்கள். இந்நாள்வரை 20 கோவில்கள் அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்திற்குள் இந்த எண்ணிக்கை 100 ஆக உயரும் என்றார்.. அதேபோல் இன்பினிட் சேவா அமைப்பு நன்கொடைகள் வழங்க விழையும் நிறுவனங்களை பதிவு செய்த பிறகு நிதியுதவி தேவையென்று பதிவிட்டோருடன் இணைக்கும். ஒருவர் ரூ.1 லட்சத்தை முதியோர் இல்லத்திற்கு வழங்க வேண்டும் என்று முடிவு செய்கின்றபோது அத்தகைய உதவி தேவைப்படும் நிறுவனங்களின் முகவரியை இவ்விணைய தளத்தின்மூலம் பெற்று உதவி கேட்பவருக்கே நேரடியாக பணம் அனுப்ப முடியும். என்று கூறுனார்.

வாழ்த்துரை வழங்கிய இந்திய ஆட்சிப் பணித்துறை முன்னாள் அதிகாரி முனைவர் எம் ராஜாராம், கடவுள் எல்லையற்றவர், சேவையும் எல்லையற்றது. இன்பினிட் சேவா என்னும் இந்த அமைப்பு எல்லையற்ற சேவைகளைப் புரியத் தொடங்கப்பட்டுள்ளது. அக்காலங்களில் அரசர்கள் கோவில் திருப்பணியைச் செய்தார்கள், இன்று மக்கள் அவசியம் செய்ய வேண்டிய பணிகள் இவை என்றும், கேரள மாநிலத்தை கடவுளின் சொந்த நாடு என்று சொல்லும்போது, தமிழ்நாட்டை கடவுளின் இருப்பிடம் என்று சொல்ல வேண்டும் என்றார். மேலும் அவர் பேசும்போது உழவாரப் பணிகளை அறநிலையத்துறை தொடங்கியதை நினைவுகூர்ந்து, கோவில் என்பது வழிபாட்டுத் தலமட்டுமல்ல, அக்காலத்தில் கோவில்களின் வருவாய் வணிகம் செய்வதற்காக கடனாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது என்றும் கற்றல் மையங்களாக, கலைகளை வளர்க்கும் இடங்களாக கோவில்கள் திகழ்வதையும் குறிப்பிட்டு இத்தகைய பணிகள் மூலம் மேலும் வாழ்க்கையின் ஒளியைக் கூட்ட முடியும் என்று கூறினார். தானே முன்மாதிரியாக மதுரை மாவட்டம் சாப்டூரில் உள்ள மிகப் பழமையான கும்பேஸ்வரன் ஆலயத்தைப் புனரமைத்து தினமும் பூஜை நடை பெறுவதை உறுதி செய்து, பொதுமக்கள் தொடர்ந்து வருகை புரிந்து இறைவழிபாடு செய்யும் பணியைக் குறிப்பிட்டு தனது உரையைத் துவக்கிய கனரா வங்கியின் முன்னாள் இயக்குநரும் 369 சேம்பர் கம்பெனியின் நிர்வாக பங்குதாரருமான திரு.ஜி வி மணிமாறன், ஒரு செயலைச் செய்வதுதான் நம்பிக்கை என்றார். விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்திலுள்ள பூமீஸ்வரர் ஆலயத்தின் தின பூஜைக்கு நிதி உதவி வழங்க பக்தர்கள் முன்வந்துள்ளதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். இன்னும் குறுகிய நாட்களில் தமிழ்நாட்டில் உள்ள 1000 கோவில்கள் ஆன்மீக அன்பர்களின் சேவைக்கு உள்ளாகும் என்றார். இன்பினிட் சேவா இணையத்தளத்தில் தன்னார்வலர்கள் பெருமளவு இணையவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 'நாம் பெறுவதைக் கொண்டு வாழ்கிறோம், ஆனால் நாம் கொடுப்பதன் மூலம் வாழ்க்கையை உருவாக்குகிறோம்' என்று வின்சென்ட் சர்ச்சிலின் மேற்கோளுடன் தனது வாழ்த்துரையைத் தொடங்கிய ரூட்ஸ்இண்டஸ்ட்ரீஸ் நிறுவன இயக்குனர் சிசிவகுமார், அறப்பணிகளை செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இன்பினிட் சேவா அமைப்பின் மூலம் தொடர் பயனடைவார்கள் என்றும், கல்வி, விளையாட்டு, சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் மிகப் பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவருவது மிகவும் அவசியம் என்றும் கூறினார். கௌரவ விருந்தினராகப் பங்கேற்ற ஈக்விட்டாஸ் சிறுநிதி வங்கியின் நிர்வாக இயக்குனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான திரு, பி.என்.வாசுதேவன், ஒரு அமைப்பு என்றுமட்டுமல்ல ஒரே ஒருவராலும் உலகை மாற்ற முடியும் என்றார். பல அரசு சாரா சேவை அமைப்புகள் தமது பணிகளைத் தொடர முடியாமல் போய்விட்ட காரணம் தொடர்ந்து நிதி ஆதாரம் இல்லாததே என்றும், எந்த ஒரு நிறுவனம் தொடங்குவது என்பதோடு பணிகளைத் தொய்வின்றி தொடர்வதே மிக அவசியம் என்றார். நிதி மேலாண்மையை கற்றுத்தருவது இன்றைய தேவை என்றும், சிறப்பாக வணிகம் செய்வது எவ்வாறு என்று தெரிந்து கொள்பவர்கள், நிதி நிர்வாகத்தைத் புரிந்துகொள்வதில்லை, அதனாலேயே பல நிறுவனங்கள் செயலிழந்துவிடுகின்றன . இன்பினிட் சேவா அமைப்பு இத்தகைய நிறுவனங்களுக்கு இடைநிறுத்தம் ஏற்படாதவாறு ஒரு மிகச் சிறந்த தளத்தை / நடைமேடையை அமைத்துக் கொடுக்கிறது. இதனால் அரசு சாரா சேவை அமைப்புகளின் பணிகள் தொய்வின்றி நிலையாகத் தொடரும் என்றார். இன்பினிட் சேவா அமைப்பிற்கு ஆசி வழங்கி உரையாற்றிய ராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி குருவரானந்தாஜி, உடல் தந்த பெற்றோருக்கும், உடனுள்ள உறவுகளுக்கும், இந்த சமுதாயத்திற்கும் நம்மால் இயன்றதைத் திருப்பித் தருவதே நமது தார்மீகக் கடமை என்றார். அனைத்து மதங்களிலும் இறைவனை அடையும் உபாயம் இத்தகைய சேவைகளின் வழி வழங்கப்பட்டுள்ளது என்றும், வியாச முனிவரின் 18 புராணங்கள் அவ்வாறே போதிக்கின்றன என்றும் கூறினார். இறைவன் நம்முன்னே பார்வை தெரியாதவரின் வடிவத்தில், ஏழையின் ரூபத்தில் வருகின்றார், நாம்தான் அவர்களுக்குச் செய்யும் சேவை இறைவனுக்கென்று புரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும். வாழும் தெய்வங்களுக்கான உதவிகள் மிகப்பெரும் தியான வழிபாடாகும். சுவாமி விவேகானந்தரின் போதனைகள் இவையாகும். 1900 ஆம் வருடத்தில் சுவாமி விவேகானந்தர் உறக்கமில்லாமல் தவித்தபோது அதற்கான காரணம் இந்த பூமியின் ஏதோ ஒரு இடத்தில் துன்பத்தில் மக்கள் உழல்வதால் என்னால் தூங்கமுடியவில்லை என்றார். அன்றுதான், அந்த நேரம்தான் பசிபிக் பெருங்கடலின் பிஜி தீவில் ஏற்பட்ட மிகப்பெரிய பூகம்பத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெற்ற சோகமான நிகழ்ச்சி சுவாமியின் மனதில் பெரும் கவலையை அதே தருணத்தில் ஏற்படுத்திவிட்டது. நம்மை எது இணைத்து, சேவைதான், இதனை அனைவருக்கும் பகிர வேண்டும் என்று கூறி ஆசி வழங்கினார். விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட விநாயகா மிஷன் ஆராய்ச்சி மைய பல்கலைக்கழக வேந்தர் மருத்துவர் ஏ எஸ் கணேசன், தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து சேலம் மற்றும் மதுரை நகரங்களுக்கு சாலை வழியாகப் பயணம் செய்யும்போது பல புராதன கோவில்கள் சிதிலமடைந்து நிற்கும் காட்சிகள் மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும், இத்தகைய கோவில்களைப் புனரமைக்கவும், தொடர்ந்து தினமும் அங்கு பூஜைகள் நடைபெறவும் பலரை ஒருங்கிணைக்கும் பணியை இன்பினிட் சேவா அமைப்பு தொடங்கியிருப்பது பாராட்டுக்குரியது என்றும், இத்தகைய இணைப்பு ஆன்மீக அன்பர்களின் பெருமகிழ்ச்சிக்கு வித்திடுவதோடு ஆன்மீக சுற்றுலாவின் வளர்ச்சிக்கும் பெரும் பயனளிக்கும் என்றார். தங்களது விநாயகா ஆராய்ச்சி மையம் அமைத்து பராமரிக்கும் 1008 சிவலிங்க கோவில் 20 ஆண்டுகால உழைப்பு என்றார். இன்பினிட் சேவா அமைப்பின் பணிகள் கோடிக்கணக்கான ஆன்மீக அன்பர்களை மகிழ்விக்கும் என்றும் தானும் இந்த அமைப்பில் ஈடுபட்டுப் பணிபுரிவது தனக்கும் பேரானந்தம் என்றும் தெரிவித்தார். ப. சுவாமிநாதன் தொகுத்து வழங்கிய இந்த விழாவின் ஏற்பாடுகளை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கார்ப்பரேஷன் நிறுவன முன்னாள் இயக்குநர் கே.எம். பத்மநாபன் மற்றும் இன்பினிட் சேவா அமைப்பின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் செய்திருந்தார், மஞ்சுளா மணி நன்றி கூறினார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
பிப்ரவரி 12, 2023

# தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் 10 நிமிடங்களில் கேலக்ஸி எஸ்24 தொடரை வழங்க சாம்சங் இந்தியா பிளிங்ட் உடன் இணைந்துள்ளது

சென்னை, 12 பிப் 2024: இந்தியாவின் மிகப்பெரிய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமான சாம்சங், இந்தியாவில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கேலக்ஸி எஸ்24 தொடரை வழங்குவதற்காக விரைவான வர்த்தக தளமான பிளிங்கிட் உடன் இணைந்துள்ளதாக இன்று அறிவித்தது. டெல்லி-என்சிஆர், பெங்களூரு மற்றும் மும்பையில் உள்ள வாடிக்கையாளர்கள் கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா, கேலக்ஸி எஸ்24+ மற்றும் கேலக்ஸி எஸ்24 ஸ்மார்ட்போன்களை பிளிங்ட் இல் ஆர்டர் செய்து 10 நிமிடங்களுக்குள் ஃபோனை டெலிவரி செய்யலாம்.

பிளிங்ட் இல் கேலக்ஸி எஸ்24 தொடரை வாங்கும் வாடிக்கையாளர்கள், எச் டி எஃப் சி வங்கியின் கிரெடிட் கார்டு மூலம் வாங்கினால் ரூ. 5000 உடனடி கேஷ்பேக்கைப் பெறலாம்.

பிளிங்ட் உடனான இணைப்பு சாம்சங் இந்தியாவில் அதன் முதன்மையான எஸ்24 தொடருக்கான பெரும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவும். சாம்சங் கேலக்ஸி எஸ்24 தொடருக்கான பதிவு முன்பதிவுகளைப் பெற்றுள்ளது, இது மிகவும் வெற்றிகரமான எஸ் தொடராக அமைந்தது. இந்தியாவில் 250,000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் ஜனவரி 18 முதல் மூன்று நாட்களில் கேலக்ஸி எஸ்24 ஸ்மார்ட்போனை முன்பதிவு செய்துள்ளனர்.

மேட் இன் இந்தியா' கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா, கேலக்ஸி எஸ்24+ மற்றும் கேலக்ஸி எஸ்24 ஸ்மார்ட்போன்கள் லைவ் டிரான்ஸ்லேட், இன்டர்ப்ரெட்டர், சாட் அசிஸ்ட், நோட் அசிஸ்ட் மற்றும் டிரான்ஸ்கிரிப்ட் அசிஸ்ட் அம்சங்களுடன் வருகின்றன. சாம்சங் கீபோர்டில் உள்ளமைக்கப்பட்ட ஏ ஐ ஆனது இந்தி உட்பட 13 மொழிகளில் செய்திகளை நிகழ்நேரத்தில் மொழிபெயர்க்கலாம். காரில், ஆண்ட்ராய்ட் ஆட்டோ தானாகவே உள்வரும் செய்திகளைச் சுருக்கி, தொடர்புடைய பதில்களையும் செயல்களையும் பரிந்துரைக்கும்.

கேலக்ஸி எஸ்24 சைகையால் இயக்கப்படும் 'சர்க்கிள் டு சர்ச்' அம்சத்துடன் வருகிறது. பயனுள்ள, உயர்தர தேடல் முடிவுகளைப் பார்க்க, பயனர்கள் கேலக்ஸி எஸ்24 இன் திரையில் வட்டமிடலாம், தனிப்படுத்தலாம், எழுதலாம் அல்லது எதையும் தட்டலாம். சில தேடல்களுக்கு, ஏ ஐ-இயங்கும் மேலோட்டப் பார்வைகள் இணையம் முழுவதிலும் இருந்து ஒன்றாக இணைக்கப்பட்ட பயனுள்ள தகவல் மற்றும் சூழலை வழங்க முடியும்.

கேலக்ஸி எஸ்24 தொடரின் புரோவிசுவல் இன்ஜின் என்பது ஏ ஐ-இயங்கும் கருவிகளின் ஒரு விரிவான தொகுப்பாகும், இது படத்தைப் பிடிக்கும் திறன்களை மாற்றும் மற்றும் படைப்பு சுதந்திரத்தை அதிகரிக்கும். கேலக்ஸி எஸ்24 அல்ட்ராவில் உள்ள குவாட் டெலி சிஸ்டம் இப்போது புதிய 5எக்ஸ் ஆப்டிகல் ஜூம் லென்ஸுடன் வருகிறது, இது 2எக்ஸ், 3எக்ஸ், 5எக்ஸ் முதல் 10எக்ஸ் வரை ஜூம் நிலைகளில் ஆப்டிகல்-தர செயல்திறனை செயல்படுத்த 50எம்பி சென்சாருடன் செயல்படுகிறது.

புதிய இன்ஸ்டன்ட் ஸ்லோ-மோ இயக்கங்களின் அடிப்படையில் கூடுதல் பிரேம்களை உருவாக்கி, மேலும் விரிவான தோற்றத்திற்காக செயல்-நிரம்பிய தருணங்களைச் சீராக மெதுவாக்கும். ஷட்டரை அழுத்தும் முன் சூப்பர் எச்டிஆர் உயிரோட்டமான மாதிரிக்காட்சிகளை வெளிப்படுத்துகிறது.

கேலக்ஸி எஸ்24 தொடர், தயாரிப்பு ஆயுளை நீட்டிப்பதில் சாம்சங்கின் உறுதிப்பாட்டை தொடர்கிறது, பயனர்கள் தங்கள் கேலக்ஸி சாதனங்களின் உகந்த செயல்திறனை இன்னும் நீண்ட காலத்திற்கு நம்பகத்தன்மையுடன் அனுபவிக்க உதவும் வகையில் ஏழு தலைமுறை ஓ எஸ் மேம்படுத்தல்கள் மற்றும் ஏழு வருட பாதுகாப்பு புதுப்பிப்புகளை வழங்குகிறது.

# மிஆ பை தனிஷ்க்-கின் 'தி குபிட் எடிட்' நகைத் தொகுப்புடன் இந்த காதலர் தினத்தில் கொஞ்சம் ஸ்பெஷலாக அன்பை வெளிப்படுத்துங்கள்




சென்னை, 12 பிப் 2024: காதலின் காலம் இப்போது வருகிறது. உங்கள் இதயங்கள் சிறகடித்து, காதலின் மந்திரத்தைத் தழுவட்டும். இந்தியாவின் மிகவும் நவநாகரீகமான நகை பிராண்டுகளில் ஒன்றான மிஆ பை தனிஷ்க், அதன் பிரத்யேக காதலர் தின நகைத் தொகுப்பான 'தி குபிட் எடிட்' (காதல் தேவதையின் நகைத் தொகுப்பு) என்ற நகைத் தொகுப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் உங்கள் அன்புக்குரியவரை மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஆழ்த்தவும், உங்கள் உள்மனதில் இருக்கும் ஆழ்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் உங்களை அழைக்கிறது.

தனிஷ்க்கின் திறன் வாய்ந்த 'தி குபிட் எடிட்' நகைத் தொகுப்பில் மிஆ-வின் சமீபத்திய நகைகள், "காதல் காற்றில் உள்ளது என்ற வாசகத்திலிருந்து உத்வேகம் பெற்றுள்ளது. இந்த நகைத் தொகுப்பில் உள்ள நேர்த்தியான நகைகள் வானத்தில் பறந்து மேகங்களுக்கு மத்தியில் மிதக்கும் லேசான உணர்வைப் பிரதிபலிக்கின்றன. அவை காதலால் வரும் மகிழ்ச்சி மற்றும் பாரமில்லாமல் மனதின் மென்மையான தன்மையின் உருவகமாக அமைகின்றன. இந்த நகைத் தொகுப்பில் முக்கியமாக, மயக்கும் சிறகுகள் கொண்ட இதயங்கள் மற்றும் மென்மையான பட்டாம்பூச்சிகள் உள்ளன. இது அன்பின் மந்திரத்துடன் வரும் உணர்வைக் குறிக்கிறது. பிரமிக்க வைக்கும் நகைத் தொகுப்பில் காந்த பதக்கங்கள் (மேக்னடிக் பெண்டண்ட்) உட்பட நவீன நகைகளும் உள்ளன. இவை இரண்டு தனித்துவமான நகைகளாக மாறும். சிக்கலான வடிவமைப்புகளில் காந்தங்கள் மற்றும் இணைப்புகளைப் பயன்படுத்துவது பல்துறைத்திறனாக அமைகிறது. இதை அணிந்தவர்கள் தங்கள் தனித்துவமான தன்மையை வெளிப்படுத்த முடிகிறது.

தி குபிட் எடிட்டில் உள்ள சில நகைகள் நேர்த்தியான ரோடோலைட் ரத்தினத்தை முக்கியமாகக் கொண்டுள்ளன. இது அதன் ஆழமான சிவப்பு மற்றும் இளஞ்சிவப்பு நிறத்திற்கு பெயர் பெற்றது. இது பேரார்வம் மற்றும் அன்பைக் குறிக்கிறது. இந்த செழிப்பான ரத்தினம் ஒவ்வொரு நகைக்கும் நேர்த்தியையும் நுட்பத்தையும் சேர்க்கிறது. அவை உங்கள் அன்புக்குரியவர்களுக்கான பாசத்தின் சரியான அடையாளங்களாக அமைகின்றன. ஒரு அற்புதமான நகையை பரிசளிப்பது என்பது என்றென்றும் 'ஐ லவ் யூ' என்று சொல்லும் ஒரு அழகான வழியாகும். இது என்றென்றும் நீடிக்கும் ஒரு உணர்வு. இந்த காதலர் தினத்தில், நவநாகரிக, பல்துறை மற்றும் ஸ்டைலான நகைகளைக் கொண்ட மிஆ-வின் தொகுப்பிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் காதலை இன்னும் கொஞ்சம் ஸ்பெஷலாக கூறுங்கள் உற்சாகமாக கொண்டாடுங்கள். மிஆ-வின் தொகுக்கப்பட்ட தேர்வு ஒரு பரிசு என்பதை விட அதிக உணர்வு ரீதியானது. இது அன்பை உள்ளடக்கியது. அன்பை உறுதியான மற்றும் நீடித்த வழியில் வெளிப்படுத்துவதற்கான சிறந்த தேர்வாக அமைகிறது. நீங்கள் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் விஷயத்தைச் செய்ய விரும்பினாலோ, உங்கள் காதலிக்கு நல்ல அம்சத்தைப் பரிசளிக்க விரும்பினாலோ அல்லது இந்த காதலர் தினத்தை மறக்கமுடியாததாக மாற்ற விரும்பினாலோ, அதற்கு ஏற்ப மிஆ-வின் நகைத் தொகுப்பு உங்கள் உணர்ச்சிகளை நன்கு எதிரொலிக்கும் நகைகளை வழங்குகிறது.

உற்சாகத்தைக் கொண்டாடும் வகையில், பாலி வித் மிஆ போட்டியின் மூலம் மிஆ பிராண்டுடன் தங்கள் அன்பைக் கொண்டாடும் 10 ஜோடிகளுக்கு பாலி-க்கு மறக்க முடியாத பயணத்தை பரிசளிப்பதில் மியா மகிழ்ச்சியடைகிறது. காதல் நிறைந்த சாகசங்களில் மிஆ-வைத் தங்கள் துணையாகத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் மிஆ-வின் பரிசுதான் இந்த பிரத்யேக பயணம்.

மிஆ பை தனிஷ்க்-கின் வணிகப் பிரிவுத் தலைவர் ஷியாமளா ரமணன் கூறுகையில், "மிஆ பை தனிஷ்க்-கின் தி குபிட் எடிட் என்ற சரியான நகைத் தொகுப்பை தேர்ந்தெடுப்பது, காதலை உற்சாகமாக ஆக்குகிறது. இது ஒரு மகிழ்ச்சிகரமான பரிசு. இது ஒருவரின் நேர்மையையும் நல்ல சிந்தனையையும் சிரமமின்றி பிரதிபலிக்கிறது. அதே நேரத்தில் அன்புக்குரிய உறவுக்கு சிறப்பான பரிசாக அமைந்து அவரது இதயத்தைத் தொடுகிறது. அவர்களுக்கு அழகான நகைகளுடன், இந்த காதலர் தினத்தில் மிஆ உங்களைப் பரவசப்படுத்தட்டும்." என்றார்.

இந்த காதலர் தினத்தில் மிஆ உங்கள் இதயப்பூர்வமான உணர்ச்சிகளின் தூதராக இருக்கட்டும். ஒரு பரிசாக மட்டுமல்லாமல், உங்கள் நீடித்த அன்பின் நிலைத்த அடையாளமாகவும் இருக்கட்டும். தனிஷ்க்-கின் தி குபிட் எடிட் தொகுப்பின் மூலம் மிஆ-வின் பரவசத்தில் மூழ்குங்கள்.

# ஆன்லைன் விளையாட்டால் பெண்ணுக்கு நேரும் விபரீதம் - ஆன்லைன் விளையாட்டில் ஏற்படும் ஆபத்து குறித்து இந்த தலைமுறைக்கு ஏற்ற ஒரு படம் 'இ-மெயில்'

சென்னை, 12 பிப் 2024: அறிமுக இயக்குனர் எஸ் ஆர் ராஜன் இயக்கத்தில் அசோக் குமார், ராகினி திவேதி, மனோ பாலா என்று பலர் நடித்துள்ள படம் இ-மெயில். படத்தின் இயக்குனரின் எஸ் ஆர் பிலிம் பேக்டரி நிறுவனத்தின் சார்பில் தயாராகி இருக்கும் இந்த படத்திற்கு கவாஸ்கர் மற்றும் ஜுபின் இசையமைத்து இருக்கின்றனர். ஆன்லைன் விளையாட்டால் சிக்கிக்கொள்ளும் ஒரு பெண்ணின் கதையை மையமாக வைத்து வெளியாகி இருக்கும் படம்.

நவீன உலகத்தில் டெக்னாலஜியால் பல நல்ல விஷயங்கள் நடந்தாலும் அதற்கு இணையாக பல்வேறு சிக்கல்கள் இருந்து தான் வருகிறது குறிப்பாக ஆன்லைன் விளையாட்டு மூலம் எத்தனையோ பேர் தங்கள் உயிரைக் கூட மாய்த்து இருக்கிறார்கள் குறிப்பாக கொரோனா காலகட்டத்தின் போது ஊரடங்கில் இந்த ஆன்லைன் விளையாட்டிற்கு பலர் அடிமையாகி தங்களுடைய பணத்தை இழந்து இருந்தார்கள் இதனால் ஆன்லைன் விளையாட்டு தடை செய்யப்பட்டது.

இப்படி ஆன்லைன் விளையாட்டில் அடிமையாகி பெண் ஒருவர் சந்திக்கும் பிரச்சனை தான் இந்த இ-மெயில். படத்தின் நாயகன் அசோக் மற்றும் நாயகி ராகினி இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டு ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள். ஆன்லைன் விளையாட்டில் அதிக ஆர்வம் உள்ள நாயகி ராகினி ஒரு கட்டத்தில் அந்த விளையாட்டிற்கு அடிமையாகி விடுகிறார். ஒரு கட்டத்தில் ஆன்லைன் விளையாட்டில் அவருக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டு மிகப்பெரிய சிக்கலில் சிக்கி விடுகிறார்.

தன்னுடைய மனைவியை அந்த பிரச்சனை இருந்து காப்பாற்ற நாயகன் அசோக்கும் முயற்சி செய்கிறார். தன்னுடைய மனைவியை காப்பாற்ற நாயகன் முயற்சி செய்யும் சமயத்தில் அவரது உயிருக்கும் ஆபத்து ஏற்படுகிறது. இதனால் இந்த பிரச்சனைகளில்




இருந்து விடுபட தானே களத்தில் இறங்கி தீர்வு காண முடிவெடுக்கிறார் நாயகி. இறுதியில் தன்னுடைய பிரச்சனைகள் இருந்து நாயகி மீண்டாரா? கணவரை அவர் காப்பாற்றினாரா? என்பதே இந்த படத்தின் கதை.

ஆன்லைன் விளையாட்டில் ஏற்படும் ஆபத்து குறித்து இந்த தலைமுறைக்கு ஏற்ற ஒரு மையக்கரு.

ஆக்ஷன், காதல் என்று ஒட்டு மொத்த படத்தையும் ஒரு சிங்கிள் ஆளாக தாங்கி இருக்கிறார் நாயகி.

படத்தின் ஒளிப்பதிவாளர் செல்வம் படத்தை லைவ்லியாக காட்டி இருக்கிறார்.

படத்தின் கிளைமாக்ஸ் ட்விஸ்ட் படத்திற்கு ஒரு சுவாரசியம்.

காட்டுக்கு சிங்கம் ராஜாவாக இருந்தாலும், எப்போதும் வேட்டையாடுவது பெண் சிங்கம்தான், அதே போல ஒரு பெண்ணாக இருந்தாலும் எனக்குள் ஆயிரம் ஆண்கள் இருக்கின்றனர்' என்ற வசனம் மூலமே இந்த படத்தின் கருவை புரிய வைக்கிறது. இந்த டிஜிட்டல் உலகத்தில் பெண்கள் எப்படி தைரியமாக இருக்க வேண்டும், பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும், ஆன்லைன் சூதாட்டதின் ஆபத்துக்கள் போன்ற கருத்தை சுவாரசியமாக சொல்லி இருக்கும் விதம் அருமை.




# பாராளுமன்ற தேர்தலில் களப்பணியாளர்களுடன் பிரச்சாரத்தில் பணியாற்றி இந்தியா கூட்டணி வெற்றிக்கு பாடுபடுவோம் முஸ்லிம் மாணவர் பேரவை மாநில நிர்வாகக் குழு கூட்டத்தில் முடிவு



சென்னை, 12 பிப் 2024: முஸ்லிம் மாணவர் பேரவை எம் எஸ் எஃப் மாநில நிர்வாக குழு கூட்டம் சனிக்கிழமை காலை 11 மணியளவில் சென்னையில் உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைமை நிலையத்தில் நடைபெற்றது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாணவர் அமைப்பான முஸ்லிம் மாணவர் பேரவை மாநிலத் தலைவர் திருச்சி ஏ எம் ஹெச் அன்சர் அலி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

எம் எஸ் எப் மாநிலச் செயலாளர் ஜெ அஜீசுர் ஹக் இறைவசனம் ஓதினார்.

எம் எஸ் எப் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஏ ஆர் ஆர் நூர் முஹம்மது வரவேற்புரையாற்றினார்.

எம் எஸ் எப் தேசிய பொதுச் செயலாளர் எஸ் ஹெச் முஹம்மது அர்ஷத் உட்பட பலர் முன்னிலை வகித்தனர்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் கே ஏ எம் முஹம்மது அபூபக்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர்கள் ஆடுதுறை ஏ எம் ஷாஜகான் மில்லத் முஹம்மது இஸ்மாயில் முஸ்லிம் மாணவர் பேரவை மாநிலத் துணைத் தலைவர்கள் சென்னை கௌ ரஹீம் பாஷா சேலம் அ அஸ்கர் ஈரோடு ஏ இர்ஷாத் மாநிலச் செயலாளர்கள் கோயம்புத்தூர் ஏ எச் அப்துல் காதர் ஜல்வத்தி ஆடுதுறை எஸ் ஷஃபிக் அஹமது மற்றும் பலர் கருத்துரை வழங்கினர்

எம் எஸ் எப் தேசிய துணைத் தலைவர் எம் அல் அல்அமின் காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் எஃப் அப்ரோஸ் செயலாளர் ஆர் அமீர் திருச்சி தெற்கு மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினர் வி மைதீன் சிராஜுதீன் செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் எஸ் செய்யது இம்தியாஸ் தென் சென்னை மாவட்டத் தலைவர் எம் அகமது பேக் கே கலீபத்துல்லா வடசென்னை மாவட்டத் தலைவர் எஸ்.முஹம்மது ரபீக் சவிதா கல்லூரி பிரிவு தலைவர் ஹதிர் செயலாளர் சேக் தவ்பிக் உமர் மற்றும் வாரணாசி தஸ்லீம் ஆரிப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. முஸ்லிம் மாணவர் பேரவை தமிழ்நாடு மாநிலத்தின் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைமைக்கும் எம் எஸ் எப் தேசிய நிர்வாகத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. பாராளுமன்றத் தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிடும் தொகுதிகளில் முஸ்லிம் மாணவர் பேரவையினர் 150-க்கும் மேற்பட்டோர் தேர்தல் பிரச்சாரத்தில் களப்பணிகளாற்றிடவும் தமிழகத்தில் திமுக தலைமையிலான இந்திய கூட்டணி வெற்றி பெறவும் மாவட்ட எம் எஸ் எஃப் நிர்வாகிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வெற்றிக்காக உழைத்திடவும் முடிவு செய்யப்படுகிறது.

3. டி என் பி எஸ் சி மற்றும் அரசு துறை சார்ந்த குரூப் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஆன்லைன் மூலமாக முஸ்லிம் மாணவர் பேரவை சார்பாக நடத்துவதென முடிவு செய்யப்படுகிறது.

4. முஸ்லிம் மாணவர் பேரவை சார்பாக இளம் பேச்சாளர்கள் மற்றும் எழுத்தாளர்களை உருவாக்கும் இலட்சிய நோக்கத்தோடு 10 மண்டலங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. முஸ்லிம் மாணவர் பேரவை மாவட்ட நிர்வாக தேர்வு நடைபெறாத மாவட்டங்களில் ஜூன் மாத இறுதிக்குள் நடத்தி முடித்திடவும் கல்லூரி மற்றும் மதரஸா பிரிவுகளில் அமைப்புகளை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்படுகிறது.

6. முஸ்லிம் மாணவர் பேரவை சார்பாக மாநில அளவிலான பேச்சுப் போட்டிகள் கட்டுரை போட்டிகள் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதென முடிவு செய்யப்படுகிறது.

7. முஸ்லிம் மாணவர் பேரவை மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் மாதந்தோறும் 500 ரூபாய் சந்தா தொகையாக செலுத்த வேண்டும் எனவும் அத்தொகையை நேரடியாக எம் எஸ் எப் வங்கி கணக்கிற்கு அனுப்பிடவும் முடிவு செய்யப்படுகிறது.